மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம்

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 93 | 02.07.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# நாட்டை சீர்படுத்தும் சிங்களத் தலைவர் ஒருவர்கூட இல்லையென்பதை காலம் எடுத்துக்காட்டியுள்ளது - எஸ்.சிறிதரன்

சம்பள உயர்வுக்காக போராடும் மலையக தோட்ட தொழிலாளர்களின் ஈ.பி.எப் மற்றும்,ஈ.டி.எப் ஆகியவற்றையும் அரசாங்கம் விட்டு வைக்கவில்லை.
நடுத்தர மக்களின் எதிர்கால சேமிப்பை கொள்ளையடிக்கவில்லை என்பதை அரசாங்கத்தால் வெளிப்படைத் தன்மையுடன் குறிப்பிட முடியுமா? இந்த நாட்டுக்கு சிறந்த சித்தாந்தம் என்பதொன்று கிடையாது.
நாட்டை சீர்படுத்தும் சிறந்த சிங்கள தலைவர் ஒருவர் இல்லை என்பதை காலம் எடுத்துக்காட்டியுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.
பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில்

பக்கம் 4

## புலம்பெயர் தமிழர்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோர வேண்டும் :
### சாணக்கியன் சபையில் வலியுறுத்து!



பொறுப்புக் கூறல் தொடர்பில் புலம்பெயர் தமிழர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் வகையில் கேள்வி எழுப்பியவரை அவமதிக்கும் வகையில் ஜனாதிபதி பதிலளித்தமை வன்மையாக கண்டிக்கத்தக்கது.
ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

பக்கம் 4


## 13ஐ நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு! யாழில் மைத்திரி!!



இலங்கை அரசியலமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பக்கம் 4

## வவுனியாவில் சத்தமின்றி முளைத்த புதிய விகாரை படையெடுக்கும் பௌத்த பிக்குகள்!!

பக்கம் 4

வவுனியா வடக்கு நெடுங்கேகேணி வெடிவைத்தகல்ப் பகுதியில் கச்சல் சமளங்குளம் தமிழர் பகுதியில் சப்புமல்கஸ்கட ரஜமகா விகாரை ஒன்று கட்டி முடிக்கப்பட்ட விகாரை திறக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டுவரை தமிழர்கள் வாழ்ந்து போரின் காரணமாக இடம்பெயர்ந்த காரணமாக சிங்கள மயமாகிவரும் இக் கிராமத்தில் தொல்லியல் அடையாளம் எனக் கூறப்பட்டு தமிழர்கள் தடுக்கப்பட்டு வந்தனர்.
அவ்வாறான பகுதியிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவு பெற்று நேற்று திறப்புவிழா இடம்பெறவுள்ளதோடு, அநுராதபுரத்தில்

## தேசிய கடன் மறுசீரமைப்பால் தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை ஜீவன் ஏற்பாரா? சுமந்திரன் கேள்வி!



பக்கம் 4

ஈ.பி.எப் மற்றும் ஈ.டி.எப் ஆகியவற்றை தமது இறுதி கால சேமிப்பாக கருதும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு தேசிய கடன் மறுசீரமைப்பு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். இதனை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்றுக்கொள்வாரா? என கேள்வியெழுப்பிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தேசிய கடன் மறுசீரமைப்பு

## தமிழர் பகுதிகளில் சீன நில ஆக்கிரமிப்பை ஏற்க முடியாது: ஜனநாயக போராளிகள் கட்சி



பக்கம் 4

வடக்கு தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் சீனா நிலங்களை ஆக்கிரமித்தால் மக்களை அணி திரட்டிப் போராட்டம் செய்யத்தயங்கமாட்டோம் என ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் கதிர் தெரிவித்தார்.
யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் (30.06. 2023) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது

## 53வது ஐ.நா.சபை கூட்டத்தொடரிலாவது எங்களுக்கு நீதி வேண்டும்! காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை!!



பக்கம் 4

# அரச வேலை பெறுவதற்கு யாழ். சிறீதர் தியேட்டர் ஒரு கடிதம் போதும்! மாணவன் ஒருவர் பகிரங்க குற்றச்சாட்டு!!!

யாழ்ப்பாணத்திலுள்ள சிறீதர் தியட்டர் அடிக்குச் சென்று கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டால், வட மாகாணத்தில் அரசாங்க பணியை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதுதான் இன்றைய நிலைமை எனவும் மாணவன் ஒருவர் அரசாங்கத்தை பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.
கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து

பக்கம் 4

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

# முல்லைத்தீவில் பரபரப்பான மனித எச்சங்கள் விவகாரம்!

## நீதிமன்றம் பிறப்பித்துள்ள அதிரடி உத்தரவு!!





முல்லைத்தீவில் மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் ஜூலை 6 திகதி அகழ்வு பணிகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள எச்சங்களை அழிவடையாமால் பாதுகாக்க நீதிமன்றத்தினால் பொலிசாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வழுங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டியபோது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் குறித்த மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த இந்த சம்பவத்தினை தொடர்ந்து கொக்கிளாய் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து கொக்கிளாய் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினை தொடர்ந்து மனித எச்சங்கள் காணப்படுகின்றன பகுதியில் ஜூலை 6 திகதி அகழ்வு பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு, அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும், அதுவரை எச்சங்கள் அழிவடையாமால் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிசாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்மித்த கடைகளை பார்வையிட்ட

## கிழக்கு ஆளுநர் செந்தில்!!





திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள கடைகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்தோடு, நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் கடைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து உள்ளூர் அதிகாரிகள் மற்றும் வணிகர் சங்கத்துடன் கலந்துரையாடினார்.

# தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து

## யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கில் கவனயீர்ப்புப் போராட்டம் !







யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி வீதியில் பொதுமக்கள் நெருக்கமாக வாழும் குடிமனைப் பகுதியில் பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டுவருவதற்கு எதிர்பை வெளிப்படுத்தும் வகையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் சனிக்கிழமை (01) காலை 9.00 மணி முதல் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வரும் காணியின் வாயிலில் மேற்கொள்ளப்பட்டது.

அந்தப் பகுதியில் குடியிருக்கும் பெண்கள், குழந்தைகள் உட்படப் பெருமளவானோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டம் குறித்துத் தகவலறிந்த பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

“மக்களுக்கு மனநோய் வேண்டாம்”, “மின்காந்த அலை, காற்றுக்கு நஞ்சு”, “மக்களை உடல், உள ரீதியாகப் பாதிப்புக்கு உள்ளாக்காதீர்கள்”, “எங்கோ போகும் இடி மின்னலை எம்மை நோக்கி இழுக்க வேண்டாம்”, “நகர்த்து நகர்த்து தொடர்பாடல் கோபுரத்தை நகர்த்து” போன்ற சுலோகங்கள் அடங்கிய பாதாதைகளைத் தாங்கியும், கோசங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் நெருக்கமாகக் குடிமனைகளில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் நோயாளர்களும் காணப்படுவதனால், பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் தொலைத் தொடர்புக் கோபுரத்தை இடமாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனாலேயே கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

# துணுக்காய் கோட்ட

## பாடசாலைகளின் நிலைகளிலே

## மல்லாவி மத்திய கல்லூரி முன்னிலை!







துணுக்காய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் மு/மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் 28.06, 30.06 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது.

இவ்வருடத்தின் துணுக்காய் கோட்ட பாடசாலைகளின் நிலைகளிலே மு/மல்லாவி மத்திய கல்லூரி ஒட்டுமொத்தமாக 446 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற குறித்த போட்டியில் மு/ஃஅமைதிபுரம் அ.த.க பாடசாலை, மு/அனிஞ்சியன்குளம் அ.த.க பாடசாலை, மு/தென்னியன்குளம் அ.த.க பாடசாலை, மு/கல்விளான் மகா வித்தியாலயம், மு/துணுக்காய் அ .த.க பாடசாலை, மு/கோட்டைக்கட்டிய குளம் அ.த.க பாடசாலை, மு/ தேறாங்கண்டல் அ .த. க பாடசாலை, மு/ஐயங்கன்குளம் அ.த.க பாடசாலை, மு/யோகபுரம் மகா வித்தியாலயம், மு/மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, போன்ற பாடசாலைகள் போட்டியில் கலந்துகொண்டிருந்தன.

# கிளிநொச்சியை போதையால் அழிக்க முனைகிறது இலங்கை அரசு!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் குற்றச்சாட்டு



கிளிநொச்சியை போதையால் அழிக்க இலங்கை அரசு முனைவதாக சட்டத்தரணி சுகாஸ் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திட்டமிடப்பட்ட இன அழிப்பை மேற்கொண்ட இலங்கை அரசு, அதன் தொடர்ச்சியாக இவ்வாறான செயல்பாகளையும் முன்னெடுத்துள்ளது.

போதைப்பொருள், சட்டவிரோத மதுபான சாலைகளை அமைத்து கிளிநொச்சியை போதையால் அழிக்க முனைப்பு காட்டியுள்ளது.

பிரதேச அமைப்புக்கள், பொது மக்களின் எதிர்புக்களையும் தாண்டி மக்கள் குடியிருப்புக்குள் இவ்வாறு மதுபான சாலைகளை அமைத்துள்ளனர்.

இதற்கான முறையான அனுமதி பெறப்படாததனை பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது. இதேவேளை, உணவுக்கான அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தொடர்ந்தும் இதனை நடத்தி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாதமைக்கு எதிராக சட்ட நடவக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

குறித்த சட்டவிரோத மதுபானசாலையை உடனடியாக மக்கள் குடியிருப்பிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் வயது குறைந்தவர்களுக்கு 5க்கு ஒன்று எனும் விகிதத்தில் பியர் வியாபாரம்!

## அக்கராயன் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு!!



வயது குறைந்தவர்களுக்கு 5க்கு ஒன்று எனும் விகிதத்தில் பியர் வியாபாரம் இடம்பெறுவதாக கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்த தெரிவித்த அக்கராயன்குளம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் முருகையா இராசலிங்கம் குறிப்பிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோத மதுபான சாலைகள் மக்கள் குடியிருப்புக்குள் அமைக்கப்பட்டுள்ளது. பெறப்பட்ட அனுமதியில் மக்கள் பயன்பாட்டு வீதியே தரிப்பிடமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், பொருத்தமற்ற இடத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வாழ அச்சமான சூழல் காணப்படுகின்றது. அந்த பகுதி மறைவுகள் கொண்ட பிரதேசமாக இருப்பதால், அச்ச நிலை எழுந்துள்ளது.

வயது குறைந்தவர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில் வேறு நபர்களைக் கொண்டு வாங்குகின்றனர். அவர்களிற்கு 5 க்கு ஒன்று எனும் அடிப்படையில் கொடுக்கின்றனர்.

அவற்றை பற்றை மறைவுகள், குளக்கட்டுக்களில் இருந்து அருந்துகின்றனர். மேலும், வீதிகளில் நின்றும் மது அருந்துகின்றனர். வெளி பிரதேசங்களில் இருந்தும் வருவதனால் பிரதேசத்தில் பாதுகாப்பில்லாமல் போகிறது.

இரவு 11 மணிக்கு மேல் திறந்துள்ளது. அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்கள் காணப்படுகிறது. இதனால் பெரும் ஆபத்தான நிலை எமது கிராமத்துக்கு எழுந்துள்ளது.

குறித்த மதுபான நிலையத்தை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தமிழர் பகுதியிலுள்ள புதைகுழிகளுக்கு! மூன்றாம் தரப்பு மேற்பார்வையே நீதியை வழங்கும்!!

## வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



தமிழர் தாயகம் முழுவதும் சிங்கள அரச படைகளினால் கொன்றெழிக்கப்பட்ட அப்பாவிப் தமிழ் மக்களின் உடலங்களின் எச்சங்களே புதைகுழிகளாக காணப்படுகின்றன என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட ஊடகங்களுக்கு அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்கு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது அதற்கான தடையங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன.

ஆனால் அவையாவும் உரிய நீதி இன்றி மறைக்கப்பட்டு காலம் கடத்தப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

கடந்தகாலத்தில் மன்னாரில் இரண்டு பாரிய புதைகுழிகளில் தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள் வந்தன ஒன்று திருக்கேதீஸ்வர வீதியில் நீர்க்குழாய் அமைப்பதற்கான அகழ்வில் அப்பகுதிக்கு அருகில் யுத்தகாலத்தில் இராணுவம் இருந்து முகாமிக்கு அருகில் உரிய ஆய்வுகள் இல்லாமல் மறைக்கப்பட்டது இண்டாவது சதொச கட்டட அமைப்பதற்கான அகழ்வில் நூற்றுக்கணக்கான எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டன அவற்றை ஆங்கிலேயர் காலத்தவை என கதை முடித்தனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது ஆனால் இதற்கான நீதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிங்கள அரசாங்கத்தால் வழங்கப்படமாட்டாது.

எனவே தமிழர் தாயகத்தில் குறிப்பாக சிறிலங்காவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பௌத்த சிங்கள அரசாங்கத்தால் நீதி கிடைக்க ஒரு போதும் வாய்ப்பு இல்லை அவ்வாறு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால் மூன்றாம் தரப்பு மந்தியஸ்தம் அல்லது மேற்பார்வை மூலமே சாத்தியப்படும் இதனால் தாயக புலம்பெயர் அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் ஒற்றுமையாக மூன்றாம் தரப்பு மேற்பார்வையை உள்ளீர்க்க வலுவான இராஜதந்திர நடவடிக்கைகளை தொடர்ந்து கையாள வேண்டும். அதுவே புதைகுழி விவகாரம் மட்டுமல்ல அரசியல் தீர்வுக்கும் வழியைத் திறக்கும் - என குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தோட்டத்துறை மக்களின் பிரச்சினைகளை கண்டறிய!

## ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டியது காலத்தின் தேவை!! : பேராயர்



இலங்கையின் பெருந்தோட்டத்துறைகளில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதற்கான சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

200 வருடங்களாக மலையக பெருந்தோட்ட மக்கள் அனுபவித்து வருகின்ற காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதுடன், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

ஐ.எம்.எப். இடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் மூலம், தொழில் முனைவோர்கள் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பணத்தை பயன்படுத்தியே நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியமே தவிர, தடை விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறு செய்வதால், எமது நாட்டை மென்மேலும் அதள பாதாளத்திற்கே தள்ளிவிடும் என பேராயர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை கரிட்டாஸ் செடெக் நிலையத்தின் தவிசாளரும் யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தலைமையில் “பெருந்தோட்ட சமூகத்தின் கௌரவமிக்க குடியுரிமையை நோக்கி“ எனும் தொனிப்பொருளில் கொழும்பிலுள்ள இலங்கை கரிட்டாஸ், செடெக் நிலையத்தில் ஊடகச் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கூறுகையிலேயே மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

”திறந்த பொருளாதார முறைமையின் மூலம் , கமிஷன் பெற்றுக்கொண்டு சூறையாடுவதையே நம் நாட்டு அரசியல் தலைவர்கள் செய்து வருகின்றனர். இந்நாட்டு வளங்களை மேம்படுத்தாது, தன்னிறைவுமிக்க நாடாக மாற்ற முடியாது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்கள் இந்நாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். இவ்வாறு அவர்கள் கைப்பற்றிய நாடுகளின் வளங்களை சுரண்டினர். நாட்டின் பல்வேறு விதமான பயிர்களை பயிரிட்டு அதன் மூலமாக கிடைக்கப்பெறும் இலாபத்தை தத்தமது தாய் நாட்டுக்கு கொண்டு செல்வதே தமது பிரதான நோக்கமாக இருந்தது.

அதுபோலவே, தற்போதும்கூட நம்நாடு போன்ற வரிய நாடுகளிடமிருந்து வளங்களை சூறையாடுவதையே செய்து வருகின்றனர். இதற்கு பெயர் திறந்த பொருளாதாரம்.

இந்த திறந்த பொருளாதார முறைமை மூலமாக சிறிய குழுக்களுக்கு எந்தவித எதிர்காலமும் கிடையாது. நாட்டில் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரம் அல்ல, சகல தொழிலாளர்களும் புதிய வடிவில் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். இந்த முறைமையின் கீழ் எமது தோட்டத் தொழிலாளர்கள் முதலாவதாக சிக்கிக்கொண்டுள்ள பிரிவினராக அறிந்து கொள்ள முடிகிறது.

அதாவது, சர்வதேச நாணய நிதியம் என்பது மேலைத்தேய நாடுகளின் பொருளாதார பலத்தை வைத்துக்கொண்டு, இந்த முறையை முன்னெடுக்கின்ற அமைப்பாகும். இதற்கு நிதி அளிப்பது பணம் படைத்த நாடுகள்தான். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளே சர்வசே நாணய நிதியத்துக்கு நிதி வழங்குகிறது.

இதன் மூலம் பணத்தை எங்களுக்கு கடன் வழங்குவது நடப்பதல்ல. மாறாக எமது பணத்தை அவர்கள் சுரண்டுகிறார்கள். ஆகவே, திறந்த பொருளாதார முறைமையின் மூலமாக ஒருபோதும் நாம் சிறந்த பொருளாதர மிக்க நாடாக உருவாக முடியாது. இந்த கடன் திட்டத்தின் காரணமாக, எமது பிரச்சினைகளை எமக்கு தீர்த்துக்கொள்ள முடியாது. மேலும் தன்னிறைவுமிக்க நாடாகவும் உருவாக முடியாது.

200 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் போல கொண்டு வரப்பட்டு, முறையான சம்பளம் கொடுக்காது, அவர்களுக்கு முறையானதொரு வீடு கொடுக்காமல் அடிமை வாழ்க்கை வாழ வேண்டும் என்ற போக்கை வெள்ளையர்கள் அமைத்திருந்தனர். இதனையே பெருந்தோட்ட கம்பனிகளும் தொடர்ந்து செய்து வருகிறது. இதனால் இந்த மக்கள் பெரும் அழுத்தத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் வீதிகளை சற்று புனரமைத்துக் கொடுப்பதும், பகுதியளவில் உட்கட்டமைப்பு வசதிகைள ஏற்படுத்திக்கொடுப்பதல் மாத்திரம் அவர்களுக்கான தேவைகள் கிடைத்து விட்டது என கருத முடியாது. முதலில் அவர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். சிறைக்கைதிகளும் மனிதர்களே என வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்த தொழிலாளர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கான உரிமை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் இந்நாட்டு பொருளாதாரத்திற்கு ஜீவ நாடியாக இருப்பதை அவர்களுக்கு உணரும் விதத்தில் அவர்களை நடத்த வேண்டும். அதற்கான கௌரவத்தை அவர்களுக்கு கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டியது அவசியம்.

தேயிலை பயிர்ச் செய்கையின் மூலம் கஷ்டப்படுகின்ற தொழிலாளர் வர்க்கத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனம் மிகவும் சொற்பமாகவுள்ளது. கம்பனிக்காரர்களும் இடைத்தரகர்களும் கோடிக்கணக்கில் பணத்தை பெற்றுக்கொள்கின்றனர். இந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றால், இந்நாட்டு ஆட்சியாளர்கள் இந்த நிலைமை குறித்து முறையாக அறிந்துகொள்ள வேண்டும். 200 ஆண்டுகளாகின்ற இந்த மலையக மக்களுக்கு ஆத்ம கௌரவத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுள்ளமையால், நாட்டின் தேசிய பொருளாதாரம் பலம் பெற்றுவிட்டதாக நினைப்பது வேடிக்கையாகவுள்ளது.

எமது நாட்டை மென்மேலும் எளிய நாடாக பாதாளத்துக்கு கொண்டு செல்லவே சர்வதேச நாணய நிதியமும், நாட்டு அரசியல் தலைவர்களும் செய்கின்றனர். இதைப்போன்றே தொழிற்சங்கவாதிகளும் அவர்களை நடத்துகின்றனர் ”என்றார்.

இந்த ஊடக சந்திப்புக்கு ஆயர் பேரவையின் தலைவரும் குருணாகல் மறை மாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்தனி, பெருந்தோட்ட துறை மக்கள் வாழ்கின்ற பகுதிகளைச் சேர்ந்த கண்டி, பதுளை, காலி, இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர்களும் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

## நாட்டை சீர்படுத்தும் சிங்களத்...

உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் பொருளாதாரத்தின் படுவீழ்ச்சி, நடுத்தர மக்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை அரசாங்கம் கொள்ளையடிக்க போகிறது என்று குறிப்பிட்ட விடயங்களை அரசாங்கம் இன்று பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பல உத்தரவாதங்களை வார்த்தைகளாக வழங்குகிறார்கள். இந்த நாட்டில் உத்தரவாதம் வழங்குவது கடந்த 100 ஆண்டுகாலமாக அவல் சாப்பிடுவது போல் இலகுவானதொரு விடயமாகவே உள்ளது. இலகுவாக குறிப்பிடுவார்கள். ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

யுத்தம் நிறைவுக் கொண்டு வந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள பின்னணியில் நாட்டில் எங்கும் துப்பாக்கி சத்தம் கேட்கவில்லை. 13,13 பிளஸ், மற்றும் சமஷ்டி என்று வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே மத்திய வங்கியின் ஆளுநரின் வாக்குறுதிகள் வெறும் வாக்குறுதிகளாகவே அமையும்.

மலைய அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் தமது சம்பள உயர்வுக்காக போராடினார்கள், இன்றும் போராடுகிறார்கள். ஆனால் 600 ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை.தற்போதைய வாழ்வாதார செலவுகளுக்கு மத்தியில் 600 ரூபாவை கொண்டு ஒரு குடும்பத்தால் எவ்வாறு வாழ முடியும்.

600 ரூபாய் சம்பளம் பெறும் தோட்ட தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தையும் கொள்ளையடிப்பது மிக மோசமானது. நாட்டில் உள்ள ஏழைகளின் சேமிப்பை கொள்ளையடித்து ஆட்சி செய்யும் நிலை ஏன் தோற்றம் பெற்றது என்பதற்கான காரணத்தை அரச தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தை கொள்ளையடிக்கவில்லை, கை வைக்கவில்லை என அரசாங்கத்தால் வெளிப்படையாக குறிப்பிட முடியுமா.? மொத்த சனத்தொகையில் 25 இலட்ச மக்களின் எதிர்காலத்தில் கை வைத்துள்ளீர்கள் .

சிங்கள சகோதரர்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். கடந்த 30 ஆண்டு காலங்களில் தமிழர்கள் போர் என்ற பெயரில் அழிக்கப்பட்டார்கள். போரின் ஊடாக அரச தலைவர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் முதலைகள் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள். மோசடி செய்யப்பட்ட சொத்துக்கள் உகண்டா உட்பட வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் ஏழைகளாகவே வாழ்கிறார்கள். இவ்வாறு ஏழைகளின் இறுதி சேமிப்பையும் அரசாங்கம் விட்டு வைக்கவில்லை என்பதை சிந்திக்கவில்லை.

ஏழைகளின் இறுதி சேமிப்பை கொள்ளையடிக்கும் அரச தலைவர்கள் நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு தீர்வு வழங்கவில்லை. 1978 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது, தன்னிறைவு அடைவோம் என்று குறிப்பிட்டீர்கள். இன்று என்ன நேர்ந்துள்ளது.மக்களின் சேமிப்பை கொள்ளையடிக்கும் நிலை வந்துள்ளது.

மத்திய வங்கியை கொள்ளையடித்தவர்கள், யுத்தத்தில் கொள்ளையடித்தவர்கள் வெளிநாடுகளில் சொத்துக்களை பதுக்கி வைத்துள்ளார்கள். மக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்க நினைக்கிறார்களே தவிர நாட்டில் உள்ள உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரச தலைவர்கள் அவதானம் செலுத்தவில்லை. பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண முன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஏன் அவதானம் செலுத்த முடியாது.

நாட்டின் எதிர்கால தலைமுறையினர் குறித்து அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் கிடையாது. அரசாங்கத்திடம் சித்தாந்த அறிவு இல்லை. நாட்டை சீர்படுத்தும் சிறந்த தலைவர் சிங்களவர்களிடம் இல்லை என்பதையே காலம் சொல்கிறது. ஏனைய இனங்களையும் இணைத்துக் கொண்டு சிறந்த முறையில் முன்னோக்கி செல்லும் தலைவரை இன்றும் ஏன் அடையாளம் காணவில்லை.

புத்தர் விகாரை கட்ட பணம் உள்ளது. தமிழர்களின் நிலங்களை அபகரிக்க காசு உள்ளது. ஆனால் மக்களுக்கு செலவு செய்ய காசு இல்லை. வடக்கு கிழக்கில் அமர்த்தும் படைகளுக்கான நிதி ஒதுக்கை மட்டுப்படுத்துங்கள். பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தற்துணிவுடன் செயற்படுத்துங்கள் என்றார்.

## புலம்பெயர் தமிழர்களிடம் ஜனா...

இராசமாணிக்கம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (1) இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பிரான்ஸ் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டபோது கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கருத்துரைத்தார்.

அங்கு இடம்பெற்ற ஒரு ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற ஒருவர் எழுப்பிய கேள்விக்கு "ஆங்கிலத்தில் பேசுவது கடினமாயின் தமிழ் மொழியில் பேசுங்கள்" என அவரை அவமதிக்கும் வகையில் கருத்துரைத்துரைத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை அமைச்சராக இருந்த காலத்தில் அந்த தமிழர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கலாம். பொறுப்புக் கூற தொடர்பில் அவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி அவ்வாறு கருத்து தெரிவித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஆகவே புலம்பெயர் தமிழர்களிடம் ஜனாதிபதி மன்னிப்பு கோர வேண்டும்.

இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார் .

ஆனால் இதுவரை முன்னேற்றகரமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஒரு வாரத்துக்குள் பாராளுமன்றத்துக்குள் ஒரு பிரேரணையை கொண்டு வந்து ஆதரவை பெற்றுக்கொள்ள அவரால் முடியுமாயின் ஏன் நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.பிரச்சினைக்கு தீர்வு காணலாம் ஆனால் அதற்கான அக்கறை அவருக்கு இல்லை என்பது புலப்படுகிறது என்றார்.

## 13ஐ நடைமுறைப்படுத்துவது...

வெள்ளிக்கிழமை யாழ் பொது நூலகத்தை பார்வையிட்ட பின் ஊடகவியலாளர்களைச் சாந்தித்தபோது ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதின்மூன்றாவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என தமிழ் கட்சிகள் கோரிக்கை முன்வைக்கின்ற நிலையில் அது அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதய அரசாங்கம் உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

ஆகவே நாங்கள் அரசாங்கத்தில் இல்லாவிட்டாலும் 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். பொது நூதகத்திற்கு விஜயம் செய்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நூலகத்தின் பல பகுதிகளைப் பார்வையிட்டதுடன் அங்கு கூடியிருந்த பணியாளர்களுடன் சினேகா பூர்வமாகக் கலந்துரையாடினார்.

குறித்த நிகழ்வில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சயின் வாஸ் குணவர்தன ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த சமீர, முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் தகாம் சிறிசேனா, அங்கஜன் இராமநாதனின் பிரத்தியோகச் செயலாளர் சிவராம் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் சத்தமின்றி...

இருந்தும் மெருமளவு பௌத்த துறவிகள் பாதயாத்திரை வருகின்றனர்.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர் மலையில் உள்ள தொல்லியல் இடத்தில் நீதிமன்ற உத்தரவினையும் மீறி இராணுவத்தினரின் துணையுடன் விகாரை அமைத்த கல்கமுவ சந்தபோதி தேரரே தற்போது வெடிவைச்சகல்ப் பகுதியில் புதிய விகாரையினையும் அமைத்துள்ளார்.

இந்த விகாரை அமைக்கப்பட்ட பகுதி அருகே இருந்த இரு குளங்களை பாரிய அளவில் புனரமைத்து அப் பகுதியில் இரகசிய சிங்கள மயமாக்கலை மேற்கொண்ட சமயம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளருமான ப.சத்தியலிங்கம் அப் பகுதிக்குச் சென்று விடயத்தை வெளிக்கொணர்ந்தபோது அநுராதபுரம் மாவட்ட உத்தியோகத்தர்கள் இரகசியமாக அப் பகுதியில் பணியாற்றியமையும் கண்டுகொள்ளப்பட்டது.

இவ்வாறு சர்ச்சையில் காணப்பட்ட இடத்திலேயே தற்போது 462 சிங்கள குடும்பங்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தேசிய கடன் மறுசீரமைப்பால்...

விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார் .

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் நாட்டு மக்களை தவறாக வழிநடத்தியுள்ளது. தேசிய கடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்படமாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் கடந்த காலங்களில் குறிப்பிட்டார்.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் என சர்வதேசத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டு மக்களை தவறாக வழிநடத்தியமை முற்றிலும் தவறானது.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் உறுப்பினர்கள் தமக்கு ஏற்பட போகும் பாதிப்பு தொடர்பில் குரல் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

அரசாங்க நிதி தொடர்பான குழு கூட்டத்தில் தேசிய கடன் மறுசீரமைப்புக்குள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன உள்வாங்கப்படும் என உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் சுய விருப்பத்துடன் கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இணக்கம் தெரிவித்தார்கள் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் கருத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய கடன் மறுசீரமைப்பால் உழைக்கும் மக்கள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள்.மலையக தோட்ட தொழிலாளர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை தமது இறுதி சேமிப்பாக கருதுகிறார்கள். இவர்களின் சேமிப்புக்கு தேசிய கடன் மறுசீரமைப்பு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் இதற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இடமளிப்பாரா? என கேள்வி எழுப்பினார்.

## தமிழர் பகுதிகளில் சீன நில...

ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் பின்னர் தமிழர் நிலப்பகுதிகள் பல்வேறு தரப்பினரால் அக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

மகாவலி என்ற போர்வையில் முல்லைத்தீவு மாவட்டம் ஆக்கிரமிப்புக்குள்ளாகிய உள்ள நிலையில் தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன தமிழர் நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் வவுனியா மாவட்டத்தில் சீனாவின் ஆதரவோடு தமிழர்களின் பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி சீனித் தொழிற்சாலை அமைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அறியக்கிடைக்கிறது.

எமது பாரம்பரிய நிலங்களை வெளிநாடுகளுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ தாரை வார்க்க முடியாது.

வவுனியா சீனித் தொழிற்சாலை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் பலர் மௌனம் காத்து வருகின்ற நிலையில் நாம் பொறுமை காக்க மாட்டோம்.

குறித்த சீனித் தொழிற்சாலை அமைப்பதற்கான காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் அரச உயர் மட்டங்களில் பேசப்பட்டு விட்டது.

ஆகவே சீனி தொழிற்சாலைக்கான காணிகளை வழங்குவதற்கான உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் வரை காத்திருக்கிறோம் வெளியிடப்பட்டதும் மக்களை அணி திரட்டி போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச வேலை பெறுவதற்கு யாழ்...

தெரிவிக்கும் போதே இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, 5 பேர் பணி புரியவேண்டிய இடத்தில் 50 பேர் பணி புரிந்து வருகின்றனர். இது அரசாங்கத்தில் நடைமுறையாக உள்ளது இதை நிறுத்த வேண்டும்.

நாட்டின் வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்றால், தனியார் மயமாக்கல் அவசியம். அதனை ஐ.எம்.எப். எடுத்துரைத்துள்ளது.

அத்துடன், 1959ஆம் ஆண்டு அரச மறை 6 சதவீதத்திலும், தனியார் 4 சதவீதத்திலும், அதே போன்று 2009இல் அரசு மறை 10இலும், தனியார் 10 சதவீதத்திலும், 2022இல் அரசு மறை 10 சதவீதத்திலும் தனியார் 15 சதவீதத்திலும் அதிகரிக்கப்பட்டது.

இதிலிருந்து தனியார்மயமாக்கல் என்பது அவசியம் என்று நாம் விளங்கவேண்டும். அதைப் பரிந்துரை செய்தது ஐ.எம்.எப். அது நாட்டினுடைய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துகின்றது என்றே கூறவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 53வது ஐ.நா.சபை கூட்டத்...

53வது ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரிலாவது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும். எமது குழந்தைகளெல்லாம் ஆயுதம் தூக்கவில்லை. இவர்களைப் போல் 40 சிறுவர்களுக்குட்பட்ட பெற்றோருடன் சரணடைந்தவர்கள் என யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க தலைவி திருமதி சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு அண்மையில் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்துகொண்ட அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

போராட்டத்தை செய்ய வேண்டிய நிலையில் எமது பிள்ளைகளைத் தேடித் தேடி நோய்வாய்ப்பட்டதன் காரணத்தால் போராட்டத்தை மேற்கொள்கின்றோம்.

எங்களுக்கு 53வது ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரிலாவது நீதி கிடைக்கப்பெற வேண்டும்.

எமது குழந்தைகளெல்லாம் ஆயுதம் தூக்கவில்லை. இவர்களைப் போல் 40 சிறுவர்களுக்குட்பட்ட பெற்றோருடன் சரணடைந்தவர்கள். சரணடைந்தது என்பது மன்னிப்பிற்காகவே. அவ்வாறு சரணடைந்த எமது பிள்ளைகளுக்கான நீதியை ஐ.நா தான் வழங்க வேண்டும். ஐ.நாவை நம்பித்தான் தாங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் போராட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க உபதலைவி நிர்மலநாதன் மேரி ரஞ்சினி கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் நீதி கிடைக்காதவரை ஐக்கிய நாடுகள் சபையிடம் நீதியைக் கோருவோம். தற்போது ஐ.நா வில் 53 வது கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் எமது நாட்டுப் பிரச்சினைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள். இம் முறையாவது காலக்கெடு வழங்கக்கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வளவு ஆதாரங்களைக் காட்டியும் இனப் படுகொலை நடக்கவில்லை எனக் கூறுகின்றனர். இவர்களின் சன்மானமோ நஷ்ட ஈடுகளோ எங்களுக்குத் தேவையில்லை. எனவே எமது உறவுகள் கிடைக்கும் வரை சாகும் வரை தொடர்ந்தும் போராடுவோம்.- என்றார்.

# சுயநல சந்தர்ப்பவாதிகளின் கூக்குரல் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் - அமைச்சர் டக்ளஸ்!!



கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் முறையான ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர, தான் தோன்றித்தனமாக எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுயநல சந்தர்ப்பவாதிகளின் கூக்குரல் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சனிக்கிழமை (01.07.2023) நடைபெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "வடக்கு மாகாணத்திலே எமது மக்களின் வாழ்வாதாரங்கள் கருதி, ஏற்கனவே ஒரு சிலர் மாத்திரம் பயன்பெற்று வந்திருந்த கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலை நாம் பரவலாக்கி இதுவரையில் பல நூற்றுக் கணக்கான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கியிருக்கின்றோம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற அடிப்படையில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை சார்ந்து நாம் பல்வேறு புதிய திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்.

"கறுப்புத் தங்கம்" எனப்படுகின்ற கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலானது எமது மக்களின் பொருளாதாரத்தில் அதீத செல்வாக்கு செலுத்த ஆரம்பித்ததும், சில தமிழ் அரசியல்வாதிகள் முதற்கொண்டு, சில சுரண்டல்வாதிகள் அதற்கெதிரான கருத்தாடல்களை முன் வைத்து வருகின்றனர்.

மக்களின் அவலங்களுக்கு தூபமிடுபவர்கள், ஆசை காட்டி தமது எவலாளர்களை தூண்டி விடுகிறார்கள். அதன் மூலம் உயர்ந்த இலட்சிய கோபுரங்களை உடைத்து வீழ்த்தி குட்டிசுவர்களாக்கி விடலாம் என கனவு காண்கிறார்கள். தம்மால் முடியாததை அடுத்தவன் செய்தால் அதைத்தடுக்க தகிடு தித்தி தாளம் போடுவது தமிழ் தேசியம் அல்ல.

நாங்கள் தமிழ் தேசத்தின் விடியலுக்காக நீதியான வழியில் இரத்தம் சிந்தியவர்கள். தமிழ் தேசியத்தை வெறும் தேர்தல் கோசமாக ஒரு போதும் உச்சரித்தவர்கள் அல்ல.

நாங்கள் அரசியல் யதார்த்த சூழலை உணர்ந்து தேசிய நல்லிணக்க பாதையில் வெளிப்படையாகவே அணிவகுப்பவர்கள், எக்காலத்திலும் அரசுடன் பின் கதவு தட்டி பேசியவர்கள் அல்ல. அல்லது தென்னிலங்கையை தூண்டி விட்டு அதில் குளிர் காய, தமிழர் தேசத்தில் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்களும் அல்ல. மாகாணசபை முறைமையில் இருந்து முன்னோக்கி செல்வதே நடைமுறை சாத்தியம் என்ற எமது தீர்க்கதரிசனத்தை ஏற்றுக் கொண்டது போல், அல்லது - அதை ஏற்க மாட்டோம் ஆனாலும் அதில் பங்கெடுப்போம் என்ற மறைமுக ஆதரவு கொடுப்பது போல். எல்லா விடயங்களிலும் இதய சுத்தியோடு செயலாற்ற முன் வாருங்கள்.

விளக்கங்களை கோரும் மக்களுக்கு குழப்பங்களை உருவாக்குவதை நிறுத்துங்கள்.

சில தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும், விளக்கமில்லாததும் - விளக்கமிருந்தும் விளங்காதது போன்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல், மக்களது வாழ்வாதாரங்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்களுக்கு நன்மைகள் கிட்டும் போது அதைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களை தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொண்டு, அரசியல் செய்வதும், தமது பிழைப்புகளை முன்னெடுப்பதும் இவர்களது நோக்கமாக இருக்கின்றது.

நாங்கள் முறையான ஆய்வுகளுக்கூடாகவே திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அன்றி, தான்தோன்றித் தனமாக எதையும் முன்னெடுப்பதில்லை. வெளிப்படையான தன்மை கொண்டவையாகவே இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடலட்டை, இறால், நண்டு, கடல் பாசி, சிப்பி போன்ற நீர் வேளாண்மைக் கைத்தொழில்களை ஒருவர் மேற்கொள்ள வேண்டுமெனில் முதலில் அவர், அத் தொழிலினை மேற்கொள்கின்ற பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடம் அது சார்ந்த கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை (நெக்டா), கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அடங்கலாக கள ஆய்வு நடத்தப்பட்டு, கடற்றொழில் அமைச்சு அதன் சாதக, பாதகங்ளை ஆய்வு செய்த பின்னரே குறித்த நபருக்கு நீர் வேளாண்மைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனை விளங்கிக் கொள்ளாமல் சுயலாப அரசியலுக்காக சிலர் கூக்குரல் இடுவது தொடர்பில் எமது மக்களும் தமிழ் ஊடகங்களும் விழிப்புடனும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்" குறித்த நாடாளுமன்ற உரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடன்பொறியில் சிக்கியிருக்கும் இலங்கை - வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கப்படும் நாட்டின் காணிகள், நிறுவனங்கள்..! ஜே.வி.பி. அதிர்ச்சி தகவல்

இலங்கையின் கடனை தீர்க்க நாட்டிலுள்ள காணிகள், நிறுவனங்களை சீனா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு வழங்கும் நிலைக்கு இந்த அரசாங்கம் இறங்கியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது கடன்பொறியில் சிக்கியிருக்கின்ற நிலையிலுள்ளனர். இதற்கு மக்கள் பொறுப்புக் கூற முடியாது. கடந்த 70 வருட ஆட்சியாளர்களும் ராஜபக்சாக்களும் பொறுப்பு கூற வேண்டும்.

ரணில் ராஜபக்சாக்களைப் பாதுகாப்பதற்கு நடந்துகொள்வதன் வெளிப்பாடுகளே இவையாகும்.

2010 ம் ஆண்டு அந்நியச் செலாவணியானது 7396 மில்லியன் டொலராகக் காணப்பட்டதுடன் 1837 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. வங்கிகளை மூடியதற்கு உள்நாட்டு கடனை மறுசீரமைப்பு செய்வதற்கேயாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் வாங்கியிருக்கும் கடன் அபரிமிதமாகக் காணப்படுவதால் கடனை மறுசீரமைப்பு செய்யுமாறு கோரிக்கை விடுத்தால் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டுமாயின் உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

நாட்டின் அந்நியச் செல்வனியானது 7196 மில்லியன் டொலராக 2010 ம் ஆண்டு காணப்பட்டது. தற்போது 1897 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. இதற்கான காரணத்தை தேடிப் பார்க்கையில் நாடு தற்போது வெளிநாட்டு வருகையை இழந்தமையை அவதானிக்க முடியும்.

தேயிலை ஏற்றுமதி, உல்லாசப் பயணத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் போன்றவை பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. கடந்த 2019 ம் ஆண்டு 4082 மில்லியன் டொலர் தனிநபர் வருமானமாக காணப்பட்டதுடன், தற்போது 3471 ஆக குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது




கடந்த 2019 ம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியானது 15810 மில்லியன் டொலராகக் காணப்பட்டதுடன் தற்போது ஏற்றுமதி மூலம் 24141 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

எது எவ்வாறரினும் நாட்டின் உற்பத்தி அதிகரித்தாலும் நாட்டின் டொலர் அதிகரித்தததால் இது எமக்கு பாதிப்பையே ஏற்படுத்தும்.

மொத்த தேசிய ற்பத்தியானது 2019 ம் ஆண்டு 88989 டொலராக காணப்பட்டதுடன் 77060 டொலராக குறைந்துள்ளது. இவ்வாறான நெருக்கடியால் அனைத்து துறைகளும் பாரிய நெருக்கடியை நோக்கி நகர்கின்றது.

2490 பில்லியன் டொலரை கடந்த ஒகஸ்ட் திருப்ப செலுத்த வேண்டிய நிலையில் திரும்பச் செலுத்த முடியாது என்று அறிவித்ததிலிருந்து இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்தது.

கடந்த காலங்களிலுள்ள வரிசை குறைந்து விட்டதால் ரணில் ராஜபக்சா வல்லவர் என்ற கருத்து மக்கள் மத்தியிலுள்ளது. 5.2 மில்லியன் டொலர் வாங்கிய கடனுக்கு செலுத்தும் வட்டியாகவுள்ளது. இந்த ஒகஸ்டுக்கு பிறகு இதை திருப்பி செலுத்த வேண்டும்.

இதனை தீர்க்க நாட்டிலுள்ள காணிகள் போன்றவற்றை சீனா அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு வழங்கும் நிலைக்கு இந்த அரசாங்கம் இறங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதித் திணைக்களம், பெற்றோலியக் கூட்டுதாபனம் போன்றவை தனியாருக்கு தாரைவார்க்கப்படவுள்ளது.

குறித்த நிறுவனங்கள் மக்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களாகும். அவற்றை தாரை வார்த்து கடன் மறுசீரமைப்பு செய்யும் நிலைக்கு முற்படுகின்றனர்.

இந்த நாட்டை கடன்பட்டு திவாலான நிலைக்கு மாற்றியது கேடுகெட்ட பரதேசிகளின் நிலையாலாகும்.

ரணில் 2015ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போது 1400 கோடி ரூபா பிணைமுறி மோசடி செய்தார். அதனை செய்தவர் அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அர்ஜீன மகேந்திரன் தற்போது நாட்டை விட்டு ஓடியிருந்தாலும் அவரை கைது செய்ய நிறைவேற்று அதிர ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்காவால் முடியவில்லை.

இதைவிட கோட்டாபய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீனி மோசடி, தாமரைக் கோபுரத்தினூடாக 200 மில்லியன் ரூபா மோசடியிலுள்ளதாக யாழ்ப்பாணத்தில் மைத்திரி குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு ஊழல் மேற்கொள்ளப்பட்ட பணங்கள் மீளக்கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதைவிட கட்டுநாயக்கா விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் காப்பெற் வீதி நிர்மாணங்களின் போது பல கோடி பெறுமதியான பணம் சூறையாடப்பட்டுள்ளது.

அஸ்வெஸ்ம என்ற நிகழ்ச்சி நிரலானது வறுமையில் வாடுகின்ற மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையாகும். 32 இலட்சம் சமுர்த்திப் பயனாளிகளாகக் காணப்பட்ட நிலையில் தற்போது அத் தொகையை 20 இலட்சமாகக் குறைக்கவுள்ளனர்.

மலையக மக்கள் இன்னல்படும் தருணம் எங்களுடைய ஜனாதிபதி என அரசியல்வாதிகள் கொண்டாடுகின்றனர்.

200 ஆண்டுகளுக்கு பின் புத்துயிர் பெறும் மலையக மக்கள் வாழ்வை அழிக்கும் முறை காணப்படுகின்றது. எனவே அஸ்வெஸ்ம என்ற மக்கள் நலன் திட்டத்தை மக்களுக்கு தீமை ஏற்படும் விதத்தில் உபயோகிக்கும் அரசின் நடவடிக்கையை மக்கள் விடுதலை முன்னணி கண்டிக்கின்றது. என்றார்.

# விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கத்திற்கேற்பவே
## தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றும் செயற்படுகிறது : சரத் வீரசேகர



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கத்திற்கேற்பவே தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

எனவே தான் அரசாங்கம் எந்த தீர்மானத்தை எடுத்தாலும் கூட்டமைப்பு அதனை எதிர்க்கின்றது. தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அவர்கள் கூறும் விடயங்களை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போன்று தேசிய கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதிக்கோ , நம்பிக்கை பொறுப்பு நிதிக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மத்திய வங்கி ஆளுனரும் மிகத் தெளிவாக இதனைக் குறிப்பிட்டுள்ளனர். எனவே மக்கள் இது தொடர்பில் வீண் அச்சமடையத் தேவையில்லை.

55 வயதின் பின் ஓய்வு பெறும் எவருக்கும் எவ்வித சிக்கலும் இன்றி தமது ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அனைத்து சந்தர்ப்பங்களிலும் , எந்த தீர்மானம் எடுக்கப்பட்டாலும் அதற்கு எதிர்ப்பினையே வெளியிடும். கூட்டமைப்பு என்பது ஒரு தேசத்துரோக அமைப்பாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் அம்பாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இலக்கு நாட்டை பிளவடையச் செய்வதாகும். கூட்டமைப்பின் எம்.பி.க்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் முன்னிலையிலேயே பதவிப்பிரமாணம் செய்தனர். எனவே அவர்கள் கூறும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய தேவை கிடையாது என்றார்.

# நேர்மையான ஆட்சியாளர்கள் இருந்தால்
## மக்கள் தியாகம் செய்ய முன் வருவார்கள் : கஜேந்திரகுமார்



தம்மை ஆள்பவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால் மட்டுமே மக்களும் எந்த சவாலையும் எதிர்கொண்டு தியாகம் செய்ய முன் வருவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் (01.07. 2023) உரையாற்றும் போதே இந்த விடயத்தை தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர், தமது தலைவர்கள், தம்மை வழிநடத்துபவர்கள் எனவும் தமது ஆட்சியாளர்கள் நேர்மையானவர்கள் எனவும் நம்புகின்ற மக்கள் நம் நாட்டில் காணப்படுகின்றனர்.

நாட்டுக்காக தாங்கள் சரியென நம்புகின்ற விடயத்துக்காக எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்ய தயாராகவே இருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு மக்கள் தமது தேச விடுதலைக்காக தமது உரிமைகளுக்காக தமது உயிரையும் அற்பணிக்க தயாராக இருந்தார்கள். தெற்கில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதென நம்புகிற போது தென்னிலங்கை இளைஞர்கள் சில தடவைகள் புரட்சியில் ஈடுபட்டு உயிரை அர்ப்பணித்திருந்தார்கள்.

இராணுவத்தை எடுத்துகொண்டால் கூட அவர்கள் தாம் சரியென நம்பிய ஒரு விடயத்துக்காக உயிரை கொடுக்க முன்வந்திருந்தார்கள்.

அது போல இந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் அதில் இருந்து மீளுவதற்காக மக்கள் எந்தவொரு தியாகத்தையும் செய்ய தயாராகவே இருப்பார்கள்.

ஆனால் நான் முதலில் சொன்னவாறு, தம்மை ஆள்பவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால் மட்டுமே மக்களும் எந்த சவாலையும் எதிர்கொண்டு தியாகம் செய்ய துணிவார்கள்.

ஆனால் இன்று எமக்கு முன்னால் இருப்பது யார்?? நாட்டை வங்குரோத்து ஆக்கியவர்களும், மத்திய வங்கி பிணைமுறி ஊழல் மூலம் பொருளாதாரத்தை சூறையாடியவர்களும் ஒன்று சேர்ந்துகொண்டு நாட்டை ஆளும் போது , அவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீராக்கி மக்களின் நலன்களை முன்னிறுத்தி முடிவெடுபார்கள் என்று எவருக்கும் துளியளவு நம்பிக்கையும் இருக்காது. என என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வெளிவரும்

தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

NEWSPAPER SIZES, RATE PER EDITION

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com







ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069


சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
021 222 8004 / 070 3015 004


காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜ்வெல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஒடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025


STUDIO
Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL
PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.